ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

# அமலனாதிபிரான்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# அமலனாதிபிரான்

## தனியன்கள்

**ஆபாத$_3$சூட$_3$மநுபூ$_4$ய ஹரிம் ஶயாநம்**
**மத்$_4$யே கவேரது$_3$ஹிதுர்முதி$_3$தாந்தராத்மா ।**
**அத்$_3$ரஷ்ட்ரு’தாம் நயநயோர்விஷயாந்தராணாம்**
**யோ நிஶ்சிகாய மநவை முநிவாஹநம் தம் ॥**

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடையுந்தி ⋆
தேட்டரும் உதரபந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய் ⋆
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனி புகுந்து ⋆
பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவினோமே

‡ அமலன் ஆதி பிரான் ⋆
அடியார்க்கென்னை ஆட்படுத்த விமலன் ⋆
விண்ணவர் கோன் ⋆
விரையார் பொழில் வேங்கடவன் ⋆
நிமலன் நின்மலன் நீதி வானவன் ⋆
நீள் மதிள் அரங்கத்தம்மான் ⋆
திருக்கமல பாதம் வந்து ⋆
என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே ॥ **1** ॥

உவந்த உள்ளத்தனாய் ⋆
உலகம் அளந்தண்டம் உற ⋆
நிவந்த நீள் முடியன் ⋆

அன்று நேர்ந்த நிசாசரரைக் ⋆
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் ⋆
கடியார் பொழில் அரங்கத்தம்மான் ⋆
அரைச்சிவந்த ஆடையின் மேல் ⋆
சென்றதாம் என் சிந்தனையே ‖ **2** ‖

‡ மந்தி பாய் ⋆
வட வேங்கட மா மலை ⋆
வானவர்கள் சந்தி செய்ய நின்றான் ⋆
அரங்கத்தரவின் அணையான் ⋆
அந்தி போல் நிறத்தாடையும் ⋆
அதன் மேல் அயனைப் படைத்ததோர் எழில் ⋆
உந்தி மேலதன்றோ ⋆
அடியேன் உள்ளத்தின் உயிரே ‖ **3** ‖

சதுர மா மதிள் சூழ் ⋆
இலங்கைக்கிறைவன் தலைபத்துதிர ஓட்டி ⋆
ஓர் வெங்கணை உய்த்தவன் ⋆
ஓத வண்ணன் ⋆
மதுர மா வண்டு பாட ⋆
மா மயிலாடரங்கத்தம்மான் ⋆
திரு வயிற்றுதர பந்தம் ⋆
என் உள்ளத்துள் நின்றுலாகின்றதே ‖ **4** ‖

பாரம் ஆய ⋆
பழவினை பற்றறுத்து ⋆
என்னைத் தன் வாரம் ஆக்கி வைத்தான் ⋆
வைத்ததன்றி என்னுள் புகுந்தான் ⋆

கோர மாதவம் செய்தனன் கொலறியேன் ⋆
அரங்கத்தம்மான் ⋆
திரு ஆர மார்வதன்றோ ⋆
அடியேனை ஆட்கொண்டதே ॥ **5** ॥

துண்ட வெண்பிறையன் ⋆
துயர் தீர்த்தவன் ⋆
அஞ்சிறைய வண்டுவாழ் பொழில் சூழ் ⋆
அரங்க நகர் மேய அப்பன் ⋆
அண்டர் அண்ட பகிரண்டத்து ⋆
ஒருமாநிலம் எழுமால் வரை ⋆
முற்றும் உண்ட கண்டம் கண்டீர் ⋆
அடியேனை உய்யக்கொண்டதே ॥ **6** ॥

கையின் ஆர் ⋆
சுரி சங்கனல் ஆழியர் ⋆
நீள்வரை போல் மெய்யனார் ⋆
துளப விரையார் கமழ் நீண் முடி எம் ஐயனார் ⋆
அணி அரங்கனார் ⋆
அரவின் அணைமிசை மேய மாயனார் ⋆
செய்ய வாய் ஐயோ ! ⋆
என்னைச் சிந்தை கவர்ந்ததுவே ! ॥ **7** ॥

பரியன் ஆகி வந்த ⋆
அவுணன் உடல் கீண்ட ⋆
அமரர்க்கரிய ஆதிப் பிரான் ⋆
அரங்கத்தமலன் முகத்து ⋆
கரிய ஆகிப் புடை பரந்து ⋆

மிளிர்ந்து செவ்வரி ஓடி ⋆
நீண்ட அப்பெரிய வாய கண்கள் ⋆
என்னைப் பேதைமை செய்தனவே ! ‖ **8** ‖

‡ ஆலமா மரத்தின் இலைமேல் ⋆
ஒரு பாலகனாய் ⋆
ஞாலம் ஏழும் உண்டான் ⋆
அரங்கத்தரவின் அணையான் ⋆
கோலமா மணி ஆரமும் ⋆
முத்துத்தாமமும் முடிவில்லதோர் எழில் ⋆
நீல மேனி ஐயோ ! ⋆
நிறை கொண்டதென் நெஞ்சினையே ! ‖ **9** ‖

‡ கொண்டல் வண்ணனைக் ⋆
கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன் ⋆
என் உள்ளம் கவர்ந்தானை ⋆
அண்டர் கோன் அணி அரங்கன் ⋆
என் அமுதினைக் கண்ட கண்கள் ⋆
மற்றொன்றினைக் காணாவே ‖ **10** ‖

அடிவரவு — அமலன் உவந்த மந்தி சதுரம் பாரம் துண்ட கை பரி ஆலம் கொண்டல் கண்ணி

அமலனாதிபிரான் முற்றிற்று

திருப்பானாழ்வார் திருவடிகளே சரணம்